NSW GOVERNMENT | Education

# பெற்றோருக்கான இணையவழிக் கட்டணச் செலுத்தல்கள்

## பெற்றோர் மற்றும் பராமரிப்பாளர்களுக்கான தகவல்கள்

Westpac -வங்கியினால் அளிக்கப்படும் பாதுகாப்பான வலைத்தளப் பக்கம் மூலமாக பெற்றோர்கள் தமது பிள்ளைகளுக்கான பாடசாலைக் கட்டணங்களை இப்போது இணைய வழியில் செலுத்தலாம். Visa அல்லது MasterCard கிரெடிட் கார்டு அல்லது டெபிட் கார்டைப் பாவித்து கணனி, டேப்ளட் அல்லது கைப்பேசி மூலமாகக் கட்டணங்களைச் செலுத்தலாம். பாடசாலை வலைத்தளத்தின் முகப்புப் பக்கத்தில் உள்ள $ Make a payment ($ கட்டணம் செலுத்துங்கள்) என்பதைத் தெரிவுசெய்வதன் மூலம் கட்டணம் செலுத்துவதற்கான வலைப்பக்கத்தினை நீங்கள் அணுகலாம்.

தம்மைப் பற்றிய விபரங்களை மீண்டும் உள்ளிடும் தேவை இல்லாத வகையில், 'தான் நிரப்பி' (auto-fill)- விருப்பத் தெரிவைப் பாவித்துக் கட்டணங்களைச் செலுத்தப் பெற்றோர்களுக்கு ஏது செய்யும் வகையில், விபரங்களை உள்ளிடுவதற்கான நேரத்தை அதிகரித்துத் தனது கணினி முறைமையைச் சமீபத்தில் Westpac அபிவிருத்தி செய்துள்ளது. கிரெடிட் கார்ட் அல்லது வங்கிக் கணக்கில் இருந்து நேரடிச் செலுத்தல் மூலமாகக் கட்டணங்கள் இப்போது செலுத்தப்படலாம்.

சுயவிருப்புப் பாடசாலைக் கொடைகள், பாடப் பங்களிப்புகள், வெளிப்பயணங்கள், மாணவர்கள் வாங்கும் பொருட்கள், புத்தாக்கம் மற்றும் கைவினைக் கலைகள் (இதில் இசைக்குழு, நாடகம் மற்றும் நடனம் உள்ளடங்கும்) ஆகியன கட்டணம் செலுத்தப்படுவதற்கான வகைகளில் உள்ளடங்கும். இந்தத் தலைப்புக்களில் இடம்பெறாத வகைகளை உள்ளடக்குவதற்காக 'இதரம்' ('Other') என்ற வகையும் உள்ளது. பாடசாலைக் 'கணக்கு அறிக்கை'(Statement of Account)யில் உள்ள மொத்தத் தொகையைச் செலுத்தவும் 'இதரம்' என்ற வகையைப் பாவிக்கலாம்.

$ Make a payment -ஐ நீங்கள் அணுகும்போது, பின்வரும் விபரங்களை நீங்கள் கட்டாயம் உள்ளிட வேண்டும்:

- மாணவரது பெயர்
- வகுப்பு
- பிறந்த திகதி

கட்டணம் செலுத்தும் முறைமைத் தொகுதியில் மாணவர்களைப் பற்றிய தகவல்கள் இருப்பில் வைக்கப்படுவதில்லை என்பதால், ஒவ்வொரு முறை கட்டணம் செலுத்தும்போதும் நீங்கள் இந்த விபரங்களை உள்ளிட வேண்டும்.

உங்களுடைய கிரெடிட் கார்ட் அல்லது டெபிட் கார்ட் விபரங்கள் பாதுகாப்பான முறையில் வைக்கப்படுவதை உறுதி செய்யும் வகையில் பாதுகாப்பான இந்த கட்டணம் செலுத்தும் முறையை Westpac வழங்குகிறது.

நீங்கள் செலுத்தும் கட்டணம் எடுக்கப்படுவதற்கு முன்பாக, கட்டணத்தைப் பற்றிய விபரங்களைச் சரிபார்க்கும் அல்லது மாற்றும் வசதி உங்களுக்கு இருக்கும். பற்றுச்சீட்டுக்கள் மின்னஞ்சலில் அனுப்பப்படவும் /அல்லது அச்சு எடுக்கப்படவும் முடியும்.

கட்டணச் செலுத்தல்களைப் பற்றிய விபரங்கள் தினமும் பாடசாலைக்கு அனுப்பப்படும், மற்றும் இதற்கான பற்றுச்சீட்டுக்கள் உங்கள் பிள்ளையின் கணக்கில் சேர்க்கப்படும். கட்டணம் செலுத்தும் வலைப்பக்கத்தில் இருந்து பற்றுச்சீட்டு ஒன்று உங்களுக்குக் கொடுக்கப்படும், ஆகவே பாடசாலையினால் இன்னொரு பற்றுச்சீட்டு கொடுக்கப்படமாட்டாது.

இணையவழிக் கட்டணச் செலுத்தல் முறையைப் பற்றிய மேலதிக விசாரிப்புகளுக்குப் 'பாடசாலை நிர்வாக அலுவலக'த்துடன் தொடர்புகொள்ளுங்கள்.

### 'தொலைபேசி மொழிபெயர்த்துரைப்பாளர் சேவை'

பாடசாலையுடன் தொடர்புகொள்ள உங்களுக்கு ஆங்கில மொழி உதவி தேவைப்பட்டால் 131 450 -இல் 'தொலைபேசி மொழிபெயர்த்துரைப்பாளர் சேவை'யுடன் தொடர்புகொள்ளுங்கள். உங்களுக்கு என்ன மொழி தேவைப்படுகிறது என்பதைச் சொல்லி, பாடசாலையைத் தொலைபேசியில் அழைக்குமாறு தொலைபேசி இயக்குனரைக் கேளுங்கள். இந்த சேவைக்காக உங்களிடமிருந்து கட்டணம் அறவிடப்படமாட்டாது.